**செய்தி வெளியீடு எண் : 414** **நாள் : 01.03.2023**

# முத்தமிழறிஞர் கலைஞர் நடமாடும் நூலகத்தினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (01.03.2023) உதயநிதி ஸ்டாலின் பவுண்டேஷன் சார்பில் ரூ.30 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நடமாடும் நூலகத்தினை சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடமாடும் நூலகத்தினை பயன்படுத்தும் வகையில் நூலகத்திற்கான உறுப்பினர் அட்டைகளை பொதுமக்களுக்கு வழங்கினார்.

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் உதயநிதி ஸ்டாலின் பவுண்டேஷன் சார்பில் ரூ.30 இலட்சம் மதிப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரிலான நடமாடும் நூலகம் இன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் 7 வார்டுகள் உள்ளன. இந்த 7 வார்டுகளில் நாளொன்றுக்கு ஒரு வார்டு என இந்த நடமாடும் நூலகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் செல்லும்.

இந்த நடமாடும் நூலகத்தில் இல்லாத பயனாளர்களுக்கு தேவைப்படும் புத்தகங்கள் குறித்து சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு 9176991768 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கும் பட்சத்தில், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் அனுமதி பெற்ற நபர்கள் மூலமாக பயனாளர்களின் இல்லத்திற்கு இருசக்கர வாகனத்தில் விநியோகம் செய்யப்படும்.

முத்தமிழறிஞர் கலைஞர் நடமாடும் வாகனம் மூலம் பயனாளர்கள் தாங்கள் விரும்பும் புத்தகங்களைப் பெற்று, படித்து ஒரு வாரத்திற்குள் திரும்ப ஒப்படைத்தால், தேவைப்படும் பிற புத்தகங்கள் குறித்து தகவல் தெரிவித்தால் அவையும் உடனடியாக வழங்கப்படும்.

மேலும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து 50 மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு அவர்கள், மண்டலக் குழுத் தலைவர் திரு.எஸ்.மதன்மோகன் அவர்கள், திரைப்பட இயக்குநர் திரு.கரு.பழனியப்பன் அவர்கள், பாடலாசிரியர் திரு.யுகபாரதி அவர்கள், எழுத்தாளர் திரு. இமையம் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in